சாலைக்கு பெயர் மாற்றம் செய்தல் மற்றும் சாலை அமைந்துள்ள பகுதிக்கு பெயர் சூட்டுதல் – விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் – கிருஷ்ணாபுரம் ஊராட்சி – மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி – பூசணிப்படுகை சாலைக்கு லிங்கம்மாள் இராமராஜ் சாலை என பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இச்சாலை அமைந்துள்ள பகுதிக்கு ரோட்டரி நகர் எனப் பெயரிட அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.169 நாள். 10.11.2008.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.6.2008.
2. அரசாணை (நிலை) எண்.137, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 30.6.2008.
3. விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.உ இ2/ 5487/06, நாள் 20.2.2007.
4. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் கடித எண்.16288/04/ப.ரா.அ1.2, நாள் 24.4.2007.

----

**ஆணை:**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 158 (2)–இல் அரசின் ஒப்புதலுடன் ஊராட்சிக்கு அல்லது வட்டார ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான பூங்கா, விளையாட்டுத் திடல், பேருந்து நிலையம், வளைவு அல்லது புதிய சொத்துக்கு பெயர் சூட்டுதல் வேண்டும். ஆனால், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அமைப்புகளில் உள்ள சாலைகள், கட்டிடங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது ஏற்கனவே உள்ள பெயரை மாற்றுவது போன்ற செயற்குறிப்புகளை ஒத்திவைக்குமாறும், அவை குறித்து உள்ளாட்சி அமைப்புகள் தீர்மானங்கள் இயற்றி அரசின் ஒப்புதலுக்கு செயற்குறிப்புகள் அனுப்புதலைத் தவிர்க்குமாறும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அறிவுரைகளை கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் கடைபிடிக்குமாறு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், திருமதி லிங்கம்மாள்–இராமராஜ் அவர்களின் குடும்பமானது தொன்றுதொட்டு தர்மகாரியங்கள் செய்து வருவதாகவும், அவர்களது மகள் திருமதி.சுதர்சனம் இராமசுப்பிரமணியராஜா என்பவர் தனது தாய் தந்தையின் ஞாபகர்த்தமாக பல தர்ம காரியங்களை மேற்கொண்டு வருகிறார் என்றும், அதன்படி 75 மலைவாழ் குழந்தைகளை தனது சொந்த செலவில் உணவு மற்றும் இருப்பிடம் அளித்து படிக்க வைத்து வருகிறார் என்றும், பூசணிப்படுகை சாலை அமைக்க 15 ஏக்கர் நிலத்தினை தானமாக வழங்கப்பட்டு, அப்பகுதியில் ரூபாய் ஐம்பது இலட்சம் செலவில் லிங்கம்மாள் இராமராஜ் பள்ளியை நிறுவி, ரோட்டரி சங்கத்தின் மேற்பார்வையில் அப்பள்ளியை நடத்தி வருவதாகவும், மேலும் அப்பகுதியில் உள்ள விவசாயிகள் சங்கத்தினரும் லிங்கம்மாள்–இராமராஜ் சாலை எனப் பெயர் சூட்டுவதற்கு கோரிக்கை வைத்துள்ளனர் எனவும், எனவே விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியைச் சார்ந்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி பூசணிப்படுகை சாலைக்கு லிங்கம்மாள்–இராமராஜ் சாலை எனப் பெயரிடவும், இச்சாலை அமைந்துள்ள பகுதிக்கு ரோட்டரி நகர் எனப் பெயரிடவும் கருத்துருவினை அனுப்பியிருந்தார்.

3. 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு எண்.158 (2)–ன் கீழ் ஊராட்சி சாலைகளுக்கு அல்லது அதன் சொத்துகளுக்கு அரசின் ஒப்புதலுடன் பெயரிடலாம் என உள்ளதால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்ட மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியைச் சார்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி பூசணிப்படுகை சாலைக்கு லிங்கம்மாள்–இராமராஜ் சாலை என பெயர் மாற்றம் செய்யவும், இச்சாலை அமைந்துள்ள பகுதிக்கு ரோட்டரி நகர் என பெயரிடவும் அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**